வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

Field Work Centre

தவணைப் பரீட்சை, யூன் - 2017

Term Examination, June - 2017

தரம் :- 12 (2018)	இந்துசமயம்	ஒரு மணித்தியாலங்கள்

- ***01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 5 பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது அப் பெயரை இனங்கண்டு அவ்விலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.***

(1) (1) பொன்னம்பல வானேஸ்வரம் (2) முனீசுவரம் (3) தான்தோன்றீஸ்வரம்
(4) கதிர்காமம் (5) திருக்கேதீஸ்வரம்

(2) (1) சிவஞானபோதம் (2) சிவஞானசித்தியார் (3) சிவப்பிரகாசம்
(4) ஞானவாசிட்டம் (5) திருவருட்பயன்

(3) (1) உடுக்கு (2) தம்புரா (3) வீணை
(4) புல்லாங்குழல் (5) பறைமேளம்

(4) (1) விநாயகர் (2) எழுத்தாணி பிடிக்கும் கரம்
(3) மோதகம் (4) டமரும் (5) அமுதகலசம்

(5) (1) அர்த்தம் (2) சர்க்கம் (3) பிரதிசர்க்கம்
(4) வம்சம் (5) வம்சானுசரிதம்

- ***06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன.அவற்றுள் ஒரு சோடியினுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியைத் தெரிவு செய்க.***

(6) 1. சுந்தரர் - திருத்தொண்டர் தொகை
2. நம்பியாண்டார் நம்பி - திருத்தொண்டர் திருவந்தாதி
3. நம்மாழ்வார் - திருவிருத்தம்
4. பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு
5. ஆண்டாள் - திருவாய்மொழி

(7) 1. கந்தபுராணம் - கச்சியப்ப சிவாச்சாரியார்
2. பெரியபுராணம் - சேக்கிழார்
3. திருவிளையாடற் புராணம் - பரஞ்சோதி முனிவர்
4. கோயிற் புராணம் - மறைஞான சம்பந்தர்
5. திருவாதவூரடிகள் புராணம் - கடவுள் மா முனிவர்

(8) 1. முல்லை - திருமால்
2. மருதம் - சேக்கிழார்
3. நெய்தல் - வருணன்
4. பாலை - கொற்றவை
5. குறிஞ்சி - முருகன்

(9)

1.	மாமங்கம்	-	முருகன் கோவில்
2.	பருத்தித்துறை	-	பசு பதீஸ்வரர் கோவில்
3.	யாழ் பல்கலைக்கழகம்	-	பரமேஸ்வரன் கோவில்
4.	நல்லூர்	-	கைலாசநாதர் கோவில்
5.	கீரிமலை	-	நகுலேஸ்வரன் கோவில்

(10)

1.	உத்தாலகர்	-	சுவேதகேது
2.	யமன்	-	நசிகேதன்
3.	ஞாஞ்ஞவல்கியர்	-	மைத்திரேயி
4.	நாரதர்	-	இந்திரன்
5.	ஜனகன்	-	ஞாஞ்ஞவல்கியார்

11 -15 வரையுள்ள வினாக்களில் "அ", "ஆ" என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலில் உள்ளவை "ஆ" நிரலுடன் உள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் பொருத்தமுடையவை "அ" நிரலில் உள்ளவற்றுடன் பொருத்தமாக ஒழுங்குபடுத்தும் போது ஐந்து சேர்மானங்களில் ஒன்று சரியாக அமையும் அதனைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறிப்பிடுக.

(11)

அ	ஆ
1) ஐயனார்	a) நேர்தல்
2) காவடி	b) வாத்தியக் கருவி
3) தப்பு	c) கலைவடிவம்
4) வளர்ந்து நேரல்	d) வேண்டுதல்
5) பரிகளம் அழைத்தல்	e) நாட்டார் தெய்வம்

(1) CBEDA (2) ECBDA (3) ABCDE (4) DECBA (5) CBADE

(12)

அ	ஆ
1) கோயிற் புராணம்	a) திருக்கோணேஸ்வரம்
2) சித்திர வேலாயுதர்	b) மகாவலிகங்கை கரையில் அமைந்த சிவன் ஆலயம்
3) நகுல மலைக்குறவஞ்சி	c) கீரிமலைச் சிவன் கோயில்
4) திருக்கரசைப் புராணம்	d) வெருகல் முருகன் கோயில்
5) தட்சணகைலாய புராணம்	e) சிதம்பரம் நடராசர் கோயில்

(1) CBDEA (2) ABCDE (3) BACDE (4) EDCBA (5) EDCBA

(13)

அ	ஆ
1) பிரமசொரூபம்	a) வெளிப்பட வடிவம்
2) வியூகம்	b) மேலான வடிவம்
3) விபவம்	c) வழிபடுவதற்குரிய வடிவம்
4) அந்தர்யாமி	d) தோன்றி வந்த வடிவம்
5) அர்ச்சாவாதாரம்	e) உள் கரைவடிவம்

(1) ADEBC (2) BADEC (3) BEADC (4) CABDE (5) CDAEB

(14)

அ	ஆ
1) ஜலசயனம்	a) ஓவியங்கள்
2) வீணாதரம்	b) சிவானந்த புராணம்
3) ஞானமிர்தம்	c) சபாபதி நாவலர்
4) ஆனந்த குமாரசாமி	d) மாமல்ல புரக் கடற்கரை கோவில்
5) ராஜபுத்திர	e) இராஜ சிம்மன்

(1) DCBAE (2) BADEC (3) ECDAB (4) CDBEA (5) DECBA

(15)

அ	ஆ
1) கோயில் நிறுவனங்களை நிர்வகிப்போர்	a) திருப்பதிகக்காணி
2) கோயில் பொக்கிஷம்	b) மாகேசுவரர்
3) கோயில் கணக்குப் புத்தகம்	c) சூலக்குறி
4) கோயிலின் உரிமையை நிலைநாட்ட அடையாளமாக அமைவது	d) ஸ்ரீபண்டாரம்
5) ஓதுவார்க்கு வழங்கப்படும் காணி	e) ஸ்ரீ பண்டாரப் பொத்தகம்

(1) ADECB (2) BDECA (3) CEDAB (4) DABEC (5) ABDCE

- **மேல்வரும் பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தோடு தொடர்புடையது. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 16 தொடக்கம் 20 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

A பட்டர் பிரான	B தர்மராஜரதம்	C துண்டுப்பிரசுரம்	D திருவாதிரை	E நவசந்திப்பண்
F பிரசங்க முறை	G பஞ்சமரபு	H சிற்பக் கலை களஞ்சியம்	I திருப்பல்லாண்டு	J திருவைந்தெழுத்து

(16) பெரியாழ்வாருடன் தொடர்புடைய சேர்மானம்

(1) A,G (2) D,H (3) A,I (4) D,I (5) E,J

(17) பல்லவர் காலக் கட்டடக்கலையுடன் தொடர்புடைய சேர்மானம்

(1) BH (2) AI (3) ES (4) DH (5) CH

(18) இந்துப் பண்ணிசையுடன் தொடர்புடைய சேர்மானம்

(1) CH (2) EG (3) EI (4) BH (5) EJ

(19) சைவ சமயத்தின் ஊடகத்துடன் தொடர்புடைய சேர்மானம்

(1) AI (2) AG (3) EI (4) BG (5) CF

(20) நடராஜர் வழிபாட்டுடன் தொடர்புடைய சேர்மானம்

(1) DH (2) BJ (3) BG (4) DJ (5) CF

- ***21 - 25 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

(21) சிவ மூர்த்தங்களுள் நான்கு அடங்கும் தொகுதி

(1) இலிங்கோற்பவர், சதாசிவம், சோமஸ்கந்தர், கங்காதரர்

(2) சுகாசனர், திரிபுராந்தகர், பரமசிவன், கிராதரர்

(3) குருமூர்த்தி, திருநீலகண்டன், ஏகபாதர், சந்திரசேகரர்

(4) பைரவர், தம்பிரான், வீரபத்திரர், பிச்சாடணர்

(5) சங்கரன், நிருத்தர், நடராசர், கலாதரர்

(22) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த சைவசமய சார்ந்த மூன்று பத்திரிகைகள் அடங்கும் தொகுதி

(1) இலங்கை நேசன், விஞ்ஞான வர்தினி, தினகரன்

(2) விஞ்ஞானவர்தினி, வீரகேசரி, ஈழநாடு

(3) இலங்கை நேசன், இந்து சாதனம், சைவ உதயிறு

(4) சைவபோதினி, சைவஉதயபானு, தினகரன்

(5) இந்துசாதனம் , உதயம், வலம்புரி

(23) திரிவர்க்கம் என்பதில் அடங்குபவை

(1) இருக்கு, யசுர், சாமம்

(2) ஆணவம், கன்மம், மாயை

(3) மனம், வாக்கு, காயம்

(4) சூரியன், சந்திரன், அக்கினி

(5) பதி, பசு, பாசம்

(24) ஈழநாட்டுச் சித்தர் ஐவர் அடங்கும் தொகுதி

(1) நவநாதச்சித்தர், சித்தானைக்குட்டி, சடைவரதர், கருவூரர், திருமூலர்

(2) கடையிற்சுவாமி, பரமகுசுவாமி, குழந்தைவேற்சுவாமி, அகத்தியர், இடைக்காடார்

(3) நவநாதச்சித்தர், செல்லாச்சி அம்மை, யோகசுவாமி, நவநாதச்சித்தர், பாரதியார்

(4) நவநாதச்சித்தர், நாகநாதச் சித்தர், சடைவரத சித்தர், சித்தானை, பெரியானைகுடி

(5) இடைக்காடார், கைலாசநாதர், சட்டைமுனி, ஆளம்பலசுவாமி, மகாதேவசுவாமி

(25) இறைவனின் பஞ்சகிருந்திய நிலையைக் குறிக்கும் மூர்த்தம்

(1) சந்திரசேகரர் (2) நடராஜர் (3) சோமஸ்கந்தம்

(4) பிச்சாடண மூர்த்தம் (5) தட்சணா மூர்த்தம்

(25 x 2 = 50 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

Field Work Centre

தவணைப் பரீட்சை, யூன் - 2017

Term Examination, June - 2017

தரம் :- 12 (2018)	இந்துசமயம்	இரண்டு மணித்தியாலங்கள்

பகுதி - II

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி - I

(1) "இந்து சமய மரபில் வேதங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன"
அ) வேதம் போற்றும் தெய்வங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
ஆ) வேதகால வழிபாட்டு முறை பற்றி கூறுக. (5 + 5 = 10 புள்ளிகள்)

(2) இந்து சமய வரலாற்றில் "வைணவ சமயம்" தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ) பிரமான நூல்களும் வழிபாடும் ஆ) வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
இ) ஆழ்வார்களின் பணிகளும் பங்களிப்பும் (3 + 4+3 = 10 புள்ளிகள்)

(3) நாட்டார் கலைகளில் காவடி சிறப்பம் பெறுகின்றது. இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ) காவடி என்பதன் பொருள் விளக்கம் ஆ) காவடி விளக்கும் தத்துவக் கருத்து
இ) காவடி எடுப்பதன் நோக்கம் (3 + 4+3 = 10 புள்ளிகள்)

பகுதி - II

(4) சைவ சமய பெரியார்களில் ஒருவரான பசுபதிச் செட்டியார் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு ஆற்றிய பணிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

(5) சிவமூர்த்தங்களில் ஒன்றான சோமஸ்கந்த மூர்த்தம் பற்றிக் கலாவிமர்சனம் செய்க. (10 புள்ளிகள்)

(6) திருக்கேதீஸ்வர ஆலயத்தின் சிறப்பு பற்றி கட்டுரை வரைக.

(7) "சைவசமய வளர்ச்சியில் திருஞானசம்பந்த நாயனார் செய்த பணிகள் மிக மகத்தானவை" இக் கூற்றினை விளக்குக.

(8) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு தருக.
அ) சைவபரிபாலன சபை ஆ) திருவாவடுதுறை ஆதீனம்
இ) பெரிய புராணம் ஈ) பெரியாழ்வார்
உ) திருமூலர் **(2 x5= 10 புள்ளிகள்)**

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

Field Work Centre

தவணைப் பரீட்சை, யூன் - 2017

Term Examination, June - 2017

தரம் :- 12 (2018)	இந்துசமயம்	புள்ளித்திட்டம்

(1) 4 (11) 2 (21) 1
(2) 4 (12) 4 (22) 3
(3) 3 (13) 2 (23) 3
(4) 1 (14) 5 (24) 4
(5) 1 (15) 2 (25) 2
(6) 5 (16) 3
(7) 4 (17) 1
(8) 2 (18) 2
(9) 1 (19) 5
(10) 4 (20) 4

(1) அ) இந்திரன் :- வேதத்தில் அதிக பாசுரங்களால் போற்றப்படும் தெய்வம் மழைத் தெய்வம்
அக்கினி :- தேவதூதன், தூய்மையின் சின்னம், புரோகிதன், மனைத்தெய்வம் எனப்போற்றப்படும் தெய்வம்
வருணன் :- ரிதம் என்றும் ஒழுங்கின் பாதுகாவலன் ஒழுங்கு, ஒழுங்கத்தை கண்காணிப்பவன். ரிதஷய கோபா என அழைக்கப்படுபவன்.
(உருத்திரன், உஷை, இராத்திரி பற்றிச் சுருக்கமாக எழுதவேண்டும்)
(5புள்ளிகள்)

ஆ) இயற்கை வழிபாடு :- 33 தெய்வங்கள் வழிபடப்பட்டன. விண், இடைநிலை மண்சார்ந்த தெய்வங்கள் கேள்வி வழிபாடு, பண்ட மாற்றுமுறை, வேண்டுதல் அடிப்படை, இருக்கு வேத கால வழிபாடு, யசுர் வேதகால, சாமவேதகால வழிபாடு யாகங்கள், இயற்கை அம்சங்கள் நாளடைவில் தெய்வங்களாக உயர்வு பெற்றமை, விண்ணுலக மண்ணுலக, இடையுலகத் தெய்வங்கள் வேதங்களில்
பல நாமம் கூறி வழிபடுதல்
காயத்திரி மந்திரம் செபம்
இசையால் இறைவனை வழிபடுதல் - சாமவேதம்
மாந்திரீகத்தில் நம்பிக்கை - அதர்வவேதம்
பண்டமாற்று வழிபாட்டு முறை (5புள்ளிகள்)

(2) அ) பிராமண நூல்கள்
வேதங்கள், பஞ்சராத்திரம், வைகாசனம், நாலாயிரத்திவ்விய பிரபந்தம், கீதை, இதிகாசங்கள், புராணங்கள் (3புள்ளிகள்)

ஆ) **தோற்றம் வளர்ச்சி**

சிந்துவெளி காலம் தொடக்கம் கால அடிப்படையில் வளர்ச்சி எழுதப்பட வேண்டும் *(04 புள்ளிகள்)*

இ) தோற்றம் வளர்ச்சி

சிந்துவெளி காலம் தொடக்கம் கால அடிப்படையில் வளர்ச்சி எழுதப்பட வேண்டும் *(04 புள்ளிகள்)*

ஈ) ஆழ்வார்களின் பணிகளும் பங்களிப்பும்

முதலாழ்வார்கள்

பல்லவர்கால 9 ஆழ்வார்களின் பணிகள் விளக்கப்பட வேண்டும். *(03 புள்ளிகள்)*

(3) அ) காவு +தடி :- காவடி என இரு பதங்கள் சேர்ந்து காவடி எனும் சொல் உருவாகின்றது. காவடியின் தோற்றம் பூர்வீகமான சுமை தூக்கும் செயற்பாட்டோடு இணைந்தது. *(03 புள்ளிகள்)*

ஆ) வேல் - ஆழ்ந்து அகன்ற நுனி கடவுள் கொள்கை கொட்டவரை அழித்து நல்வோரைக்காத்தல்

மயிற்தோகை - பிரணவமாகிய ஓங்காரம்

மயிலிறகுகள் - ஆணவம் வலி குன்றி மலபரிபாக பட்டிருத்தல்

காவடி எடுப்பவர் - ஆன்மா பாசங்களிலிருந்து விடுபட்டு விடுதலை நாடுதல்

வழிபாட்டு முறை - தன்னைத் தானே துன்புறுத்தி ஆன்மீக விடுதலை பெறுதல் *(04 புள்ளிகள்)*

இ) மனிதர் தமக்கேற்படும் துன்பங்களைப் போக்க பக்தியை வளர்க்கவும், வெளிப்படுத்தவும் மன அமைதி பெற

நேர்த்திக்காக காவடி எடுத்தல்

நோய் நீங்க *(03 புள்ளிகள்)*

(4)
- உயர்கல்வி - கும்பகோணம் அரசினர் கல்லூரி
- கல்வி மரபு - நாவலர் பரம்பரை
- நாவலர் நோக்கில் சைவத்தையும் அதன் வளர்ச்சிக்கு கருவியாகிய கல்வியையும் வளர்ப்பதனை தன் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தமை.
- சைவபரிபாலன சபையின் உறுப்பினராக இருந்தமை
- சைவபரிபாலன சபையின் பொருளாதாரக் கடமையாற்றியமை
- யாழ்ப்பாண இந்துக் கல்லூரியினை ஆரம்பித்து நடத்தியமை
- குருகுல வகுப்பை ஆரம்பித்து கலைதிட்டத்தின் அடிப்படையில் நடத்தியமை
- குருகுல வகுப்பை ஆரம்பித்து கலைத்திட்டத்தின் அடிப்படையில் நடத்திமை
- குருகுல வகுப்பை நடத்த விடுதிகள் அமைத்தமை

  திருக்கேதீச்சரப்பணிகள்
  - பழைய சிவலிங்கம் கண்டுபிடித்தல்
  - புதிய ஆலயம் அமைத்தல்
- வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திருப்பணிக்கு மானியம் அளித்தல்
- விக்டோரியா வாசிகசாலை திறத்தல் அதன் பொருளாதாரக் கடமையாற்றல்
- இந்து வாலிபர் சங்கத்தை உருவாக்கல்
- இந்து சாதனம் எனும் பத்திரிகையை ஆரம்பித்து நடாத்துதல் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டமை
- தேவார பாராயண வகுப்புக்களை ஆற்றுப்படுத்தியமை *(10 புள்ளிகள்)*

(5) சிவமூர்த்தம் 64 சிறப்பு 25 இதில் சோமஸ்கந்த மூர்த்தமும் ஒன்று. சிவன் உமையுடனும், கந்தனுடனும் வீற்றிருக்கும் மூர்த்தமும் சோமஸ்கந்த வடிவமாகும்.

ஸ + உமா + ஸ்கந்த வடிவம்

இலட்சண வீதி

இறைவன் முக்கண்ணனாக காட்சியளிப்பார்

அமர்ந்திருக்கும் ஆசனம் பத்ரபீடம்

புலித்தோலாடையை அணிந்தவன்

வலது கை - பரசு

இடது கை -மான்

மற்றைய வலது கை - அபயகரம்

நான்காவது கை - வரதகரம்

வலது கை - மகர குண்டலம், சிம்ஹ குண்டலம்

இடது காதில் - பத்ர குண்டலம்

தலை - சடா மகுடம், ஊமத்தம் மலர், பிறை என்பன சடையிற் சூடப்பட்டுள்ளன.

மார்பில் - உபவீதம்

இடுப்பில் - உத்தரியம் கட்டப்பட்டுள்ளது.

உமையின்

வலது கரம் - தாமரை

இடது கரம் - ஆசனத்தை தொட்டுக் கொண்டிருக்கும்

இடது கால் - தொங்கவிடப்படும்

வலது கால் - மடிந்தவாறு

வலது கை - உற்பலத்தை தாங்கும்

இடது கை - வரதம்

கந்தன்

உமைக்கு சிவனுக்கும் நடுவில் அமையும்

ஒரு முகம்

இரு கண்கள்

இரு கரங்கள்

கரண்ட மகுடம்

மகர குண்டலம்

கைகளில் காப்பு

வலது கரம் - தாமரை

தத்துவம்

உண்மை :- அறிவு - இன்பம் (ஸத், சித், ஆனந்தம்) என்ற மூன்றின் வடிவமே சோமஸ்கந்த மூர்த்தத்தின் தத்துவம்.

சிவன் - ஸத்

உமை - சித்

முருகன் - ஆனந்தம்

சிவன் இச்சா, கிரியா சக்தியையும் ஞானா சக்தியாகிய கந்தனையும் செயற்படுத்திய பஞ்சம கிருத்தியங்களைச் செய்கின்றார்.

சமய சமூக முக்கியத்துவம்

தேர்த்திருவிழாவின் போது திருவுலாக் கொண்டு வருதல் *(10 புள்ளிகள்)*

(6) ஆலய அமைவிடம்

இலங்கையின் வடக்கே மன்னார் மாவட்டத்திலே அமைந்துள்ளது.

பண்டைய வரலாறு

கேதுவினால் பூசிக்கப் பெற்றது

மயன், மகாதுவட்டா என்னம் இரு தேவதச்சர்கள் பூசித்தமை பற்றிய தட்சிணகைலாய புராணம் கூறுகின்றது.

உபதிஸ்ஸன் எனும் பிராமணன் திருக்கேதீச்சரத்திலே பூசை செய்தான்.

திருக்கேதீச்சரத்தை நாகர்கள் வழிபட்டதற்குச் சான்றாக நாகநாதன் என்ற பெயரும் திருக்கேதீச்சர நாதருக்குண்டு. கி.பி 2ம் நூற்றாண்டில் மாந்தை துறைமுகம் இருந்தது.

சோழர்களது காலத்தில் இராசராசேசுவர மகாதேவன் கோயில் என இவ்வாலயம் அழைக்கப்பட்டது. (இராஜஇராஜேஸ்வரம்)

இறைவன் - திருக்கேதீஸ்வரநாதன் இறைவி - கௌரி அம்பாள்

தீர்த்தம் - பாலாவி தலவிருட்சம் - வன்னி மரம்

சுந்தரர் தேவாரத்தில் கேதீஸ்வரநாதன் அட்டன் என்றும் சிட்டன் என்றும் குறிப்பிடப்பட்டது.

இது ஆகம முறைப்படி அமைந்துள்ளது.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் தீர்த்தச் சிறப்புப் பற்றி பாடியுள்ளார்.

சிவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

ஏனைய விழாக்களும், நூல்களும் குறிப்பிடப்படல் *(10புள்ளிகள்)*

(7) கி.பி 6ம் நூற்றாண்டு முதல் 9ம் நூற்றாண்டு வரைளான பல்லவர் கால சமயச்சூழல் பற்றி எழுதப்படல் வேண்டும்.

வாழ்க்கை வரலாறு பற்றிய விளக்கம்

சமய,சமூக பணிகளில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் பங்களிப்பு இயற்கையைப் போற்றுவதன் மூலம் மனித வாழ்வு வளம் பெறுவதைப் பாடியமை.

தேவாரப் பதிகங்கள் பாடியமை

தலயாத்திரை மூலம் பக்தியை வளர்த்தமை

வாதங்கள் புரிந்து சைவ சமயத்தை நிலைநாட்டியமை

திருநீறு, பஞ்சாட்சர மந்திரத்தின் பெருமையை உலகறியச் செய்தமை

பசிப்பிணியை நோக்கியமை

அரசரை மதம் மாற்றியமை

சற்புத்திர மார்க்கத்தில் நின்று வாழ்ந்து காட்டியமை

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் சமூக நோக்கு - இறைவழிபாட்டால் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என வழிகாட்டியவர்

கலை, தத்துவ வளர்ச்சியில் பங்களிப்பு

இயற்கை அழகையும் இறை ஆற்றலையும் உணரச் செய்தவர்
புராணக்கதைகள்,இதிகாசத்தை கடவுட் கொள்கை என்பவற்றைப் பதிகத்தின் ஊடாக எடுத்துக்காட்டல். *(10புள்ளிகள்)*

(8) **சைவபரிபாலன சபை**

சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாத்த நாவலரது வழியில் அவரது சிந்தனைகளையும் கொள்கைகளையும் சைவமரபைப் பேணிப் பாதுகாப்பதற்காக யாழ்ப்பாணத்தில் உருவாகியதே சைவபரிபாலன சபையாகும். இது 1888ம் ஆண்டு 10ம் மாதம் 29ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சைவசமய பரிபாலன சபை 189-.09.17ல் சைவபரிபாலன சபை என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

சபை நிறுவப்பட்டதன் நோக்கம்

* சைவசமயத்தின் வளர்ச்சிக்கும் பிரசாரத்திற்கு ஊக்கமளிப்பது
* சைவக்கோயில்களைத் தாபித்தல், பழுதுபார்த்தல், திருத்தியமைத்தல்,கோயில்களைப் பெறுப்பேற்று நடாத்துதல்
* சைவப் பாடசாலைகளைத் தாபித்து நிர்வகித்து, பராமரிப்பது சைவப்பிள்ளைகளுக்கான நூல்களை பிரசுரித்தல்.

பணிகள்

* இந்து சாதனம் என்னும் பத்திரிகையை தமிழில் வெளியிட்டது
* ஆங்கிலத்தில் Hindu orgam என்ற பெயரில் வெளியிடப்பட்டது.
* வருடந்தோறும் தமிழக அறிஞர்களும் எமது நாட்டு அறிஞர்களும் பங்கு கொள்ளும் சைவ மாநாட்டை நடாத்துதல். இதனால் சமய விழிப்புணர்வை ஏற்படுத்தியது
* இச்சபை நாவலரதும், அவரது ஞான பரம்பரையினதும் சமய நூல்களை மறுபிரசுரம் செய்து வெளியிட்டது.
* பாடசாலை மாணவரிடையே பரீட்சை நடாத்தி சைவ மாநாட்டின் போது பரிசில்கள் வழங்கி ஊக்கிமளித்தல்.
* சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் போன்ற பரீட்சைகளை நடாத்தி பட்டங்களை வழங்குதல்
* நாயன்மார் குருபூசை தினங்களை கொண்டாடுதல்
* புராணபடனம், திருமுறை பாராயணம் நடாத்துதல்
* சைவசமய சமூக மேம்பாட்டை பாதுகாக்கும் பணியை முன்னெடுத்தல்

ஆ) திருவாவடுதுறை ஆதீனம்

காலம் :- நாயக்கர் காலம்
அமைவிடம் :- நாகபட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை கும்பகோணம் சாலையில் உள்ளது.
பரம்பரை :- திருக்கைலாச பரம்பரை, மெய்கண்ட சந்தானம்
நிறுவியவர் :- நமசிவாய மூர்த்திகள்
சீடர்கள் :- குழந்தை சிவப்பிரகாசம், மறைஞான தேசிகர், அம்பலவாண தேசிகர்
கிளைமடங்கள்:- 136
பிரதான நூல்கள்:- மெய்கண்ட சாஸ்திரங்கள்
தசகாரியங்கள்
அதிசயமாலை
சமயப்பணி :- கிளை மடங்களை நிறுவுதல்
மானியங்களை நிர்வகித்தல்

சமூகப்பணி :- குருகுலங்களை அமைத்தல்
மேல்நிலைப் பள்ளிகள் அமைத்தல்
சுருக்கெழுத்து பள்ளிகளில் கணனி கற்பித்தல்
நூல்வெளியீடு செய்தல்
இயற்கை அனர்த்தங்களின் போது பொது மக்களுக்கு உதவுதல்.

இ) **பெரியபுராணம்**

சைவமக்களால் பெரிதும் போற்றப்படும் தமிழ்மொழி புராணங்களில் பெரியபுராணமும் ஒன்றாகும். இது அன்பால் நிறைந்த அழுத சுரவியாக விளங்குகிறது.
சமய இலக்கியமாகவும் சைவ காப்பியமாகவும் போற்றப்படும்.
நூல் பெரிய புராணமாகும்
இதனை இயற்றியவர் சேக்கிழார்
12ம் திருமுறையில் அடக்கப்பட்டது.
சோழ பேரரசை ஆண்ட அனபாயன் எனப்படும் 2ம் சோழ மன்னன் வேண்டியதற்கு இனங்க சேக்கிழாரால் பாடப்பட்டது.

சங்ககாலம் முதல் சோழர் காலம் வரை தமிழ் நாட்டில் இருந்து வாழ்ந்த சைவபணிகள் பல ஆற்றிய நாயன்மாரின் திவ்ய வரலாற்றை பக்தி சுவை நனி சொற்றும் வகையில் கூறும் நூல்
முதல் நூல் :- சுந்தரர் அருளிய திருதொண்டர் தொகை
வழிநூல் :- நம்பியாண்டர் நம்பி அருளிய திருதொண்டர் தொகை
63தனி அடியார் :- 9 தொகை அடியார், 4250 பாடலைக் கொண்டது.
சுந்தரரை காவிய நாயகனாக கொண்டது.
இறைவன் உலகலாம் உணர்ந்து என்று நூலுக்கு முதலடி எடுத்துக் கொடுத்த பெருமைக்குரிய நூலாகும்.

ஈ) **பெரியாழ்வார்**

பாண்டிய நபட்டில் வில்லபுத்தூரில்
தந்தை - முகுந்தர் , தாய் - பதுமை
ஆனிமாத சுவாதி நட்சத்திரத்தில் அவதரித்தார்
மறுபெயர் - விஷ்ணு சித்தர், பட்டர்பிரான்
பிரபந்தங்கள் - திருப்பல்லாண்டு
பெரியாழ்வார் திருமொழி

பணிகள் :- நந்தவனம் அமைத்து மலர் கொய்து மாலையாக தொடுத்து திருமாலுக்கு சாத்தும் திருப்பணி இறையருளால் பொற்கிளி பெற்று ஸ்ரீவில்லிபுத்தூரில் கோயில் கட்டி பூசைக்குரிய மலர்மாலை கொடுத்து வாந்தார்.

உ) **திருமூலர்**

கி.பி 3ம் - 6ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்
திருக்கைலாச மரபில் வந்தவர் (சிவமரபு நந்தி, நாதன்)
திருநந்தி தேவரிடம் சிவாகமங்களை கற்றவர்
இளமை திருநாமத்தை சுந்தரநாதன் என கொண்டவர்
தமிழ் நாட்டில் உதித்த சித்தர்களால் தலமை சித்தராக கருதப்படுகிறார். சித்தர் பரம்பரையின் வித்து என போற்றப்படுகின்றார்.
திருவாவடுதுறையில யோக நிஸ்டையில் ஆழ்ந்தவர்
திருமந்திரத்தை இயற்றியவர் ஆவார். **(5 x2 = 10புள்ளிகள்)**